1973 பிப்ரவரி 6]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த மார்ட்கேஜ் பாங்குகள் மூலமாக அதிக பட்சம் எவ்வளவு லோன் கொடுக்கிறார்கள்? குறைந்த பட்சம் எவ்வளவு லோன் கொடுக்கிறார்கள் என்கிற விவரத்தை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : எல்.ஐ.சி., எம்.ஐ.ஜி. ஸ்கீம்படி வீடு கட்ட பணம் குறைந்தபட்சம் பத்தாயிரம் ரூபாயும், அதிகபட்சம் 20 ஆயிரம் ரூபாயும் அளிக்கப்படுகிறது. அதிகபட்சம் இருபதாயிரம் என்பதைத்தான் 25 ஆயிரம் என்று உயர்த்த இப்போது தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : செய்திச் சுருள்கள் மூலமாக எதை எதையோ படம் எடுத்துக் காட்டுவதைக் காட்டிலும் இதுபோன்ற எந்த எந்த வகையில் வீடு கட்ட பண உதவி பெற்று வீடு கட்டிக் கொள்ளலாம் என்பதைச் செய்திச் சுருள்கள் மூலமாகப் படம் எடுத்து மக்களுக்கு இந்த விவரங்களை எல்லாம் தெரியச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அங்கங்கே விழாக்கள் நடக்கிறபோது இந்த விவரங்கள் எல்லாம் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படுகின்றன. பத்திரிகை வாயிலாகவும் தெரிவித்துக்கொண்டிருக்கிறோம்.

Supply of power to Madras Aluminium Factory

* 36 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether electricity is supplied at a concessional rate to the Madras Aluminium Factory at Mettur?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஆம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : 72–73-ஆம் ஆண்டுக்கு மேட்டூர் அலுமினியம் பாக்டரிக்கு மின்சாரம் சப்ளை செய்யப்பட்ட காரணமாக நமது வாரியத்திற்கு எவ்வளவு நஷ்டம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : 1959–60-ஆம் ஆண்டு மேட்டூர் அலுமினியம் பாக்டரிக்கு அளிக்கப்படுகிற மின்சக்திக்கு முதல் 10 ஆயிரம் யூனிட் வரை 1.5 காசாகவும், அதற்கு மேற்பட்டு, 25 ஆயிரம் யூனிட் வரை 2.5 காசாகவும் வசூலிக்க தீர்மானிக்கப் பட்டது. இந்தச் சலுகை மூலம் எவ்வளவு இழப்பு என்பதற்குத் தனிக் கேள்வி போடவும்.

[1973 பிப்ரவரி 6

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அலுமினியம் தொழிற்சாலை என்பது பவர் ஹங்கிரி தொழிற்சாலை என்று சொல்வார்கள். இதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பு மின்சார கட்டணச் சலுகை தீர்மானிக்கப்பட்டது என்றால் இப்போது அதைத் திருத்தி அமைக்க அரசாங்கமோ, போர்டோ நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு.. ஓ. பி. இராமன் : இப்போது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. ஏ. எம். இராஜா : அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது யூனிட் ஒன்றை $1\frac{1}{2}$ காசுக்கும், $2\frac{1}{2}$ காசுக்கும் கொடுப்பதாகக் கூறினார்கள். அங்கு உற்பத்தியாகக்கூடிய அலுமினியத்தில் பெரும் பகுதியை மின்சார வாரியமே கன்ஸ்யூம் செய்வதாகத் தெரிகிறதே, இந்த அலுமினியத்தையும் குறைந்த ரேட்டில் மின்சார வாரியம் வாங்கிக்கொள்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எந்த அளவில் விற்கவேண்டும் என்பதற்கு அவர்களுக்கு ஒரு இலக்கணம் இருக்கிறது. அந்த அடிப் படையில்தான் அவர்கள் விற்கிறார்கள். நாம் வாங்கிக்கொள்கிறோம். நாம் அளிக்கிற மின்சாரச் சலுகைக்கும், வாங்கிக்கொள்கிற அலுமினி யத்திற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : என்னுடைய மூலக் கேள்வியே "Whether electricity is supplied at a concessional rate to the Madras Aluminium Factory at Mettur" என்பதுதான். ஆகவே, அதனால் ஆண்டு ஒன்றுக்கு நமக்கு இவ்வளவு நஷ்டம் என்கிற கணக்கு பழைய வருடங்களுக்காவது இருக்காதா? அதை அறிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : 1 கோடி ரூபாய் என்று மின்சார வாரிய பட்ஜெட்டின் போது சொன்ன நினைவு. குறிப்பிட்ட ஆண்டுக்கு எவ்வளவு என்று தனியாகக் குறிப்பிட்டுக் கேட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. எம். சுரேந்திரன் : மின்சாரக் கட்டணச் சலுகை அளிப்பத னால் எவ்வளவு நஷ்டம் என்பதற்குத் தனிக் கேள்வி வேண்டும் என்றார்கள். அவர்களுக்கு எவ்வளவு யூனிட் கொடுக்கப்படுகிறது என்றாவது சொல்ல முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

1973 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எவ்வளவு யூனிட் கொடுக்கிருேம், எவ்வளவு இழப்பு ஏற்படுகிறது என்பதுபற்றித் தனிக் கேள்வி போட்டால், சொல்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : 50--60-ல் கட்டணச் சலுகை நிர்ணயித்தார்கள் என்ருல் அதற்குப் பிறகு 12 வருடங்கள் ஆகிவிட்டனவே. ஏன் அந்தக் கட்டணத்தை மாற்றி அமைக்க பரிசீலனை செய்யவில்லை? செய்யாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பின்னல் பரிசீலனை செய்யப்பட்டு கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்போதும் உயர்த்துவதற்குப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிருேம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : விவசாயத்திற்கும், மற்றுமுள்ள தொழில்களுக்கு எல்லாம் அதிகமான கட்டணத்தை நாம் நிர்ணயித்திருக்கிறபோது யூனிட் $1\frac{1}{2}$ பைசா, $2\frac{1}{2}$ பைசா என்று இந்த அலுமினியம் பாக்டரிக்குக் கொடுக்க தனிச் சலுகை 59–60-ல் ஏன் கொடுக்கப்பட்டது ? அந்தச் சமயத்தில் அந்தத் தனிப்பட்ட தொழில் அதிபர் அப்போதிருந்த ஆட்சியாளர்களின் கட்சியில் இருந்தார் என்பதாலா ? நமது அமைச்சரவை அதைப் பரிசீலனை செய்ததா ? நாம் நெய்வேலியில் இருந்தும், மற்ற இடங்களில் இருந்தும் 6.2 காசுக்கும், இப்போது 8 காசுக்கும் மின்சாரத்தை வாங்கும் நிலையில, குறைந்தபட்சம் 6 காசு என்ற அளவிலாவது அவர்களிடம் இருந்து கட்டணம் வசூலிக்க மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த அலுமினியத் தொழிற்சாலையைப் பொறுத்த அளவுக்கு முன்னலே என்ன நோக்கத்தோடு செய்யப்பட்டது என்ற ஆராய்ச்சியை நான் செய்ய விரும்பவில்லை. ஆனல், அவர்கள் சொன்னதைப் போல, நாடு முழுவதும் அலுமினியத் தொழிற்சாலை எங்கெங்கே இருக்கிறதோ அங்கங்கே உற்பத்தி செலவு எவ்வளவு ஆகிறது என்பதைப் பொறுத்து இந்த விலையை நிர்ணயம் செய்கிருேம். விலையை அதிகப்படுத்திஞல் இந்த தொழிற்சாலை நடைபெறுகின்ற வாய்ப்பு இருக்காது.

இரண்டாவது காரணம், இது வெளிநாட்டோடு தொடர்பு கொண்ட தொழிற்சாலை என்பதாலே அந்தத் தொழிற்சாலைக்கும் அரசுக்கும் ஒப்பந்தம் ஏற்படுகிறது. இப்பொழுது, இன்னும் அதிகமான விலையை நிர்ணயிக்க வேண்டுமென்ற முடிவை எடுத்து,

நாம் விலையை அதிகப்படுத்தி இருக்கிறோம். இதுவும் போதாது இன்னும் அதிகப்படுத்தலாம் என்று ஒப்பந்தத்திலே போட்டிருக்கிறோம். எவ்வப்பொழுது அதிகக் கட்டணம் வசூலிக்க முடியும் என்று தென்படுகிறதோ அவ்வப்பொழுதெல்லாம் விலையை உயர்த்துவதற்கு அந்த ஒப்பந்தத்திலே அதிகாரம் எடுத்திருக்கிறோம்.

தென் சென்னை மின் வழங்கு நிறுவனம்

* 37 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியிலுள்ள தென் மதராஸ் மின்சாரக் கார்ப்பரேஷனை அரசே எடுத்து நடத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது செயலாக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) இந்த ஆண்டிற்குள் எடுக்கப்படும்.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, இந்த நிறுவனம் நாட்டுடைமையாக்கப்படும் என்ற எண்ணம் ஏற்பட்ட காரணத்தினால், அது செய்ய வேண்டிய பணிகளை எல்லாம், முக்கியமான பணிகளைக் கூட தாமதப்படுத்தி வருகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதற்குத்தான் இந்த ஆண்டு அரசுடைமையாக்கப்படும் என்று கூறினேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி : தலைவர் அவர்களே, எல்லா கம்பெனிகளும் அரசுடைமையாக்கப்படுமா, அல்லது இந்த ஒரு கம்பெனி மட்டும்தான் அரசுடைமையாக்கப்படுமா ? எல்லாக் கம்பெனிகளையும் அரசுடைமையாக்க எவ்வளவு நாள் ஆகும் என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, எல்லா கம்பெனிகளும் இந்த ஆண்டு அரசுடைமையாக்கப்படும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, தெற்கேயுள்ள தஞ்சாவூர் திருச்சி மற்றுமுள்ள ஜில்லாக்களிலே தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னுடைய அலுவலகங்களை வைத்திருக்கிற காரணத்தினால்,